# பழந்தமிழ் இலக்கியங்களில் விருந்தோம்பல்

*முனைவர் கு. சண்முகப்பிரியா*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் கலைக்கல்லூரி, திருவைகுண்டம்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958695

## முன்னுரை

பழந்தமிழ் மனையற மகளிரின் முதன்மையான கடமை விருந்தோம்பலாகும். விருந்து எனும் சொல் "புதுமை" எனப் பொருள்படும் "விருந்தோம்பல்" தலைவியின்றி நிகழ முடியாததாதலின் தலைவியின் உயர் பண்புகளில் ஒன்றாகும். விருந்து புறந்தருதலைத் தொல்காப்பியர் குறித்து உள்ளார். கோவலன் பிரிவால் கண்ணகி விருந்து செய்ய இயலாமைக்கு வருந்துதலையும் இராமனைப் பிரிந்த நிலையில் சீதை விருந்து புறந்தருவதற்கில்லையே என்று கூறி பழந்தமிழ் காப்பியங்கள் சுட்டுவதை அறியலாம்.

## வாழ்வியல் அறங்கள்

ஒருவன் தன் குடும்ப வாழ்க்கைக்கும் சமுதாயத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளே அறம் எனப்படுகிறது.

**"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்**
**அறத்து வழிப்படூ உம் தேற்றம் போல"** ***(புறம்.31)***

என்ற கூற்றுக்கு இணங்க வாழ்விற்கு அடிப்படையாக இருப்பது அறமே என்பதை சங்ககால மக்கள் முற்றிலும் உணர்ந்திருந்தனர்.

## விருந்தோம்பல்

பழங்காலத்தில் "விருந்து" கணவன் மனைவியரிடையே ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாகவும் விளங்கியது. வந்தவர்கள் அனைவரையும் வரவேற்று விருந்தளிக்கும் 'சுவளமனைசுசு என்றும் உலகமே விருந்துண்ண வந்தாலும் இல்லையென்று சொல்லாது விருந்தோம்பும் செல்வமனை என்றும் சங்கப்பாடல்கள் இயம்புகின்றன.

**"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"** ***(கற்பியல். 11)***

என்று தொல்காப்பியமும் குடும்பத்தலைவியின் பண்புகளையும் குறிப்பிடுவதிலிருந்து விருந்து போற்றுதல், மகளிர் கடமைகளில் தலையான ஒன்றாகும் என்பதை அறியலாம்.

**"மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"** ***(குறள்: 90)***

மென்மையான அனிச்சமலர் போல் முகமலர்ந்து உபசரிப்பதை அழகாக எடுத்துக்கூறுகிறார்.

ஒருநாள், இரண்டு நாட்கள் அல்ல பல நாட்கள் தொடர்ந்து பலரோடு சென்றாலும் முதல்நாள் எங்ஙனம் அன்போடும் ஆர்வத்தோடும் இனிது வரவேற்றாலோ அதே போல் என்றும் விருப்புடன் வரவேற்கும் பண்பினை அதியமான் நெடுமானஞ்சி கொண்டவன் என்பதை ஔவையார்.

**"ஒருநாட் செல்லல் மிகுநாட் செல்லலாம்**
**பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**
**தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ"**
***(புறம்: 101)***

என்று போற்றியுள்ளார்.

### விருந்தோம்பலும் மகளிரும்

வீட்டிற்கு வந்த விருந்தினரை முகங்கோணாமல் வரவேற்று உபசரிக்கும் பண்பு பெண்களுக்கு இயற்கையானதாகும் பழந்தமிழ்ப் பெண்கள் விருந்தோம்பும் குணம் படைத்தவராய் இருந்தனர் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

**"அமிழ்து அட்டு ஆணாக் கமழ்குய் அடிசில்**
**வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை**
**மகளிர் மலைத்தல்"** ***(புறம் 10 7-9)***

இப்பாடலின் மூலம் அமிழ்தத்தைத் தன் சுவையால் வென்றதும், உண்ண, உண்ண தெவிட்டாத மணம் கமழ்வதுமான உணவும், நல்ல தாளிப்புடையதுமான உணவை வந்த விருந்தினருக்குக் குறைவில்லாமல் வழங்குவர் இதுவே குற்றமற்ற இல்வாழ்க்கையுடைய மகளிர் செயலாகும்.

**"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லைசான்ற கற்பின்**
**மெல்இயற் குறுமகள் உறைவின் ஊரே" -**
**இடைக்காடனார் *(நற். 142: 9-11)***

இப்பாடலின் வாயிலாக இரவு நேரமானாலும் வந்த விருந்தினரைக்கண்டு மகிழ்ச்சியடையும் ஒழுக்கம் உடைய கற்பினையுடையவள் என்பதை அறியலாம்.

### ஊடல் தீர்தல்

**"அட்டிலோளே அம் மா அரிவை**
**எமக்கே வருகதில் விருந்தே சிவப்பு ஆன்று,**
**சிறிய முள் எயிறு தோன்ற**
**முறுவல் கொண்ட முகம் காண்கம்மே" -**
**மாங்குடி கிழார்** ***(நற்.120:9-12)***

காதலனுடன் கூடியிருக்கும் மனைவி விருந்தினர் வந்தால் ஊடலை விட்டுவிடுவாள். ஏனெனில் விருந்தினரை வரவேற்று அவர்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களை ஆக்குவதிலே பொழுது போக்குவாள் ஊடியிருந்த அவளுடைய முகத்திலே மகிழ்ச்சி தவழும் என்ற செய்தியினை அறியலாம்.

காதலன் பரத்தையர் நட்பை நாடித் திரிந்து விட்டு மனைக்கு வருகிறான். அவன் செயலைக் கண்டிப்பதற்கு மனைவிக்கு நேரமேயில்லை. அவன் செய்கைக்காக அவனிடம் ஊடல் கொள்வதற்கு வாய்ப்பேயில்லை. காரணம் ஓயாமல் விருந்தினர் வந்து கொண்டேயிருப்பதால் உபசரிப்பிலே அவளின் நேரம் போய்விடுகிறது என்ற செய்தியினை இச்செய்யுளின் மூலம் அறியலாம்.

**"நல்மனை நனிவிருந்து அயரும்**
**கைதூ வின்மைதயின் எய்தாம் ஆறே"**
***(நற் 280: 9-10)***

பழந்தமிழ்ப் பெண்கள் எவ்வளவு விருந்தினர் வந்தாலும் மனங்கோணாமல் பண்டங்கள் குறைவாக இருந்தாலும் வந்த விருந்தினர் அனைவருக்கும் உணவிட்டு உபசரிப்பர் என்பதை.

**புறநானூறு.**
**தவச்சிறிது ஆயினும் மிகப்பல ரென்னான்**
**நீணெடும் பந்தருண்முறை யூட்டும்**
**இற்பொலி மகடூஉப் போலச், சிற்சில**
**வரிசையின் அளிக்கவும் வல்லன், உரிதினின்**
**காவல் மன்னர் கடைமுகத்து உகுக்கும்**
**போகுபலி வெண்சோறு போலத்**
**தூவவும் வல்லன், அவன் தூவுங்காலே**
**சிறப்பாக உணர்த்துகிறது.**
***(புறம்: 331: 7-13)***

*மலைச்சாரலிலே கானவனால் அம்பு எய்து வீழ்த்தப்பட்ட முள்ளம்பன்றியின் கொழுத்த இறைச்சியை அவன் மனைவி கொடிச்சி மகிழ்ச்சியுடன் எடுத்துக்கொண்டு வந்து அதை பலருக்கும் பகுத்துக் கொடுப்பாள் என்பதை.*

***"கானவன் எய்தமுளவு மான் கொழுங்குறை***
***தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு***
***காந்தன் அமர்சிறுகுடிப் பகுக்கும்"***

***(நற்: 85.8-10)***

*நற்றிணைப்பாடல் வழி அறியலாம். இதன் மூலம் நாகரிகம் பெறாத மலைவாழ் பெண்களிடமும் பிறருக்கு பகுத்துக் கொடுத்து உண்ணும் குணம் இருந்தது என்பதை அறியலாம்.*

*மகளிர் தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை விரும்பி வரவேற்று ஓம்புதல் மனையாகக் கருதப்பட்டது. இத்தகைய மனையறம் வாய்ந்த தலைவியை அள்ளூர் நன்முல்லை என்னும் பெண்பாற்புலவர் படைத்துள்ளார். அவள், தன் முன்னோர்களில் வீரப்போர் புரிந்து இறந்துபட்டு நடுகல் தெய்வமானவர்களைத் தொழுது வேண்டினாள். அவள் தெய்வத்திடம் தன் வீட்டிற்கு விருந்தினர் இடைவிடாமல் வரவேண்டும் என வேண்டுகிறாள்.*

***"நடுகற் கைதொழுது பரவு மொடியாது***
***விருந்தெளிர் பெறுகதில் யானெ யென்னையும்"***

*என மற்றவர்கள் விரும்பாதவற்றை விரும்பும் சிறந்த குடும்பத்தலைவியைப் படைத்துக்காட்டுகிறார் நன்முல்லையார்.*

### *முடிவுரை*

*சங்க இலக்கியங்களில் விருந்தோம்பலின் சிறப்பையும், அக்கால மகளிர் விருந்தோம்பிய பண்பும், பாங்கும் சிறப்பிற்குரியது. பழந்தமிழ் இலக்கியங்களின் வாயிலாக "விருந்தோம்பல்" பண்பு தமிழருக்கே உரியது என்று கூறுவது மிகையாகாது. இல்வாழ்க்கையில் ஈடுபட்ட பெண்டிர் விருந்தினரைப் போற்றி வரவேற்று உதவுவதை முக்கியமான குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். பண்டைத்தமிழர் விருந்தோம்பலைச் சிறந்ததோர்அறமாகப்போற்றினர். கணவனுடன் கூடி வாழும் மங்கல மகளிர்க்குரிய தனி உரிமையாக இது கருதப்பட்டது.*